*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டம்*

---

*(1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, ஏப்பிறல் மாதம் 09 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 16.50** **தபாற் செலவு : ரூபா 5.25**

**1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டம்**

[1999 ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ.80/96.

**இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் மற்றும் சுங்கான் புகையிலை ஆகியவற்றின்மீது வரியொன்றைச் சுமத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச்சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

புகையிலை வரியைச் சுமத்துதல்.

**2.** (1) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு சிகரட்டு, சுருட்டு, பீடி, சிகரட்டுப் பதிலீட்டுப்பொருள் மற்றும் ஒவ்வொரு கிலோகிராம் சுங்கான் புகையிலை மீதும் (இதனகத்துப்பின்னர் "புகையிலை வரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரியொன்று கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தனித்தனி வீதங்களில் விதிக்கப்படுதலும் இறுப்பனவு செய்யப்படுதலும் வேண்டும் அத்துடன் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் தொடர்பில் இறுப்பனவு செய்யப்படும் புகையிலை வரியின் வீதம் அல்லது வீதங்கள் , அப்பொருள், எவ்வகுப்பில் அல்லது விவரணத்தில் சேர்ப்பிக்கப்படுகின்றதோ, அவ்வகுப்புக்கு அல்லது விவரணத்துக்கு ஏற்பத் தீர்மானிக்கப்படலாம்; அத்துடன் அதற்கிணங்க, வெவ்வேறு வகுப்புக்களை அல்லது விவரணங்களைச் சேர்ந்த அப்பொருள் தொடர்பில், வெவ்வேறுபுகையிலை வரி வீதங்கள் தீர்மானிக்கப்படலாம்.

(3) முறையே, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் மற்றும் சுங்கான் புகையிலை அல்லது அவற்றின் எவ்வகுப்பினதான அல்லது விவரணத்தினதான எப்பொருள் மீதும் விதிக்கப்படும் வரி வீதமானது, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரினால் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம்.

*(4)* ஓராம் அல்லது *(3)* ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன், அது வசதியாகக்கூடியவாறு, வெகுவிரைவில் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்துக்கு முன் கொணரப்படுதலும் வேண்டும்.

*(5)* பாராளுமன்றம் அங்கீகரிக்க மறுக்கின்ற, *(1)* ஆம் அல்லது *(3)* ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை எதுவும், அத்தகைய மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் வலிதுடைமைக்குப் பங்கமின்றி, இல்லாதொழிக்கப் பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளை எதுவும் எத்தேதியன்று இல்லாதொழிக்கப்பட்டது எனக் கருதப்படுகின்றதோ, அத்தேதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*(6)* இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஏதேனும் தொழிற் சாலையிலிருந்து அகற்றப்பட்ட சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் மற்றும் சுங்கான் புகையிலை ஆகியன, அத்தகைய தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரட்டுகள் சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் மற்றும் சுங்கான் புகையிலை எனக்கருதப்படுதல் வேண்டும்.

*சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றை உற்பத்தி செய்பவர்களால் செலுத்தப்படற்பாலதான வரி.*

*3.* *(1)* புகையிலை வரியானது, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றின் உற்பத்தியாளர் ஒருவராகத் தொழில் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வோராளாலும் செலுத்தப்படற்பால தாதல் வேண்டும். வரியின் அளவு, அத்தகைய உற்பத்தி எந்தத் தொழிற்சாலையில் நடைபெறுகிறதோ, அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டவையும் அத்துடன் அதிலிருந்து அகற்றப்பட்டவையுமான சிகரட்டுகளின், சுருட்டுகளின், பீடிகளின், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்களின் எண்ணிக்கையையும் மற்றும் சுங்கான் புகையிலையின் கிலோகிராம்களையும் தொடர்புபடுத்திக் கணிக்கப்படுதல் வேண்டும் அத்துடன், ஏதேனும் வாரத்தில் தொழிற்சாலை யொன்றிலிருந்து அவ்வாறு அகற்றப்பட்ட சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலையின் கிலோகிராம்கள் ஆகியவற்றின் மொத்த அளவின்மீது செலுத்தப்படற்பாலதான வரியானது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு, அடுத்துவரும் வார முடிவுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆள் ஒருவர். எத்தொழிற்சாலையிலிருந்து சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அத்தொழிற்சாலையிலிருந்து, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை எவற்றையும் அவற்றின்மீது செலுத்தப்படற்பாலதான புகையிலை வரியானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முறையாகச் செலுத்தப்பட்டிருந்தாலொழியவும் அத்துடன் செலுத்தப்படும்வரையும், அகற்றுவித்தலோ அல்லது அகற்ற அனுமதித்தலோ ஆகாது.

(3) தொழிற்சாலையொன்றில் ஏதேனும் அளவிலான புகையிலை ஒப்படைக்கப்பட்டவிடத்து அல்லது தொழிற்சாலையொன்றிலிருந்து ஏதேனும் அளவிலான சிகரட்டுகள், சுருட்டுகள். பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை அகற்றப்படவிருக்கின்றவிடத்து, விடயத்துக்கு ஏற்றவாறு, அத்தகைய ஒப்படைப்பு நடந்த பின்னர் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் அல்லது அத்தகைய அகற்றுதல் நடை பெறுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்கு முன்னர், விடயத்துக்கு ஏற்றவாறு, அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட புகையிலையின் அளவை அல்லது அவ்வாறு அகற்றப்படவிருக்கும் சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப்பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றின் அளவைக் குறித்துரைக்கின்றதும் அத்தகைய தொழிற்சாலைக்குப் பொறுப்பாக இருக்கின்றவரால் ஒப்பமிடப்பட்டதுமான வெளிப்படுத்துகையொன்றை, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அந்நோக்கத்துக்கென மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் பதவிப்பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குக் கொடுத்துதவுதல் அத்தகைய தொழிற்சாலைக்குப் பொறுப்பாக இருக்கின்ற அவரது கடமையாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வெளிப்படுத்துகை ஒவ்வொன்றும், அந்நேரத்துக்கென மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படக்கூடிய வாறான அல்லது ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகிய வற்றை ஏற்றுமதி செய்ய முன்னுகின்ற உற்பத்தியாளர்கள் மதுவரி ஆணையாளர் தலைமையதி பதிக்கு வெளிப்படுத்துகை செய்தல் வேண்டும்.

4. (1) இச்சட்டத்தின் கீழான நோக்கத்துக்காகப் பதிவுசெய்யப் பட்ட உற்பத்தியாளர் ஒருவர், அத்தகைய வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய நாட்டுக்கு, அவரால் உற்பத்தி செய்யப்பட்டனவும், அத்தகைய வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளனவுமான அத்தகைய அளவிலன சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொகருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய முன்னுகின்றார் என மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்றவிடத்து, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றை, அவை எத்தொழிற்சாலையில் அல்லது பண்டகசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருக்கின்றனவோ, அங்கிருந்து, இச்சட்டத்தின்கீழ் அவற்றின்மீது செலுத்தப்படற்பாலதான புகையிலை வரியைச் செலுத்தாமலேயே எடுத்துச் செல்வதற்கு, அத்தகைய உற்பத்தியாளரை அனுமதித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்கின்ற உற்பத்தியாளர் ஒவ்வொருவரும், அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்பட்ட ஆறு மாதங் களுக்குள் அத்தகைய வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய அளவிலான சிகரட்டுகளை, சுருட்டுகளை, பீடிகளை, சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்களை அல்லது சுங்கான் புகையிலையை, அத்தகைய வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான நாட்டுக்கு அவர் ஏற்றுமதி செய்து விட்டார்என மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுகின்றவாறு எண்பிப்பைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள உற்பத்தி யாளர் ஒருவர், அப்பிரிவின்கீழ் அவரால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய அளவிலான சிகரட்டுகளை, சுருட்டுகளை, பீடிகளை, சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்களை அல்லது சுங்கான் புகையிலையை, அத்தகைய வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நாட்டுக்கு எற்றுமதி செய்துவிட்டாரென, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுகின்றவாறு எண்பிப்பைச் சமர்ப்பிக்கத் தவறுகின்றவிடத்து மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள்

அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றின்மீது செலுத்த்ப்படற்பாலாதான புகையிலை வரியை, அத்தகைய சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியன, எத்தொழிற்சாலையில் அல்லது பண்டகசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தனவோ, அத்தொழிற்சாலையிலிருந்து அல்லது பண்டகசாலையிலிருந்து அவை அகற்றப்பட்ட திகதியிலிருந்து, அத்தகைய வரி மற்றும் அதன் மீதான வட்டி செலுத்தப்படும் திகதிவரை, ஆண்டொன்றுக்குப் பத்து சதவீதம் என்ற வீதத்தில் அத்தகைய வரித்தொகை மீதான வட்டியுடன் சேர்த்துச் செலுத்தப்படுதல் வேண்டுமென அவரைப் பணித்தல் வேண்டும்.

5. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதற்குப் பின்னரும், ஆளொருவர், அவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றின் உற்பத்தியில் புகையிலையைப் பயன்படுத்துதல் ஆகாது. *உற்பத்தியாளர்களைப் பதிவு செய்தல்.*

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, உற்பத்தியாளர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்–

(அ) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு, அந்நோக்கத்துக்கென அவர் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றின் உற்பத்தியில் புகையிலை பயன்படுத்தப்படுவது அல்லது பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்படுவது தொடர்பில், அத்தகைய படிவத்தில் தரப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்பட்ட தொகையைக் கொண்ட விண்ணப்பக்கட்டணம் ஒன்றுடன் சேர்த்துச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, உற்பத்தியாளர் ஒருவராகப் பதிவுசெய்யப்பட்ட ஆள் ஒருவர், மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டபோது. விடயத்துக்கேற்றவாறு, குறித்துரைக்கப்பட்ட அளவிலான புகையிலையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது உற்பத்தி செய்யவென மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றின் அளவு பற்றிய விபரங்களைக் கொண்ட விபரத்திரட்டொன்றை அவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும், அத்துடன், அவ்வுற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை தொடர்பில் அத்தகைய விபரத்திரட்டில் தனிவேறான விபரங்கள் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

*புகையிலை வரியானது மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல்.*

6. (1) எவரேனும் உற்பத்தியாளரால் இச்சட்டத்தின்கீழ், காலத்துக்குக்காலம் செலுத்தப்படற்பாலதான புகையிலை வரியின் அளவு, மதுவரி ஆணையாளருக்கு அல்லது அத்தகைய ஆணையாளரினால் பதவிப்பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அத்தகைய ஆளினால் திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இருபத்தோரம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், புகையிலை வரியானது எம்முறையில் செலுத்தப்படுதல் வேண்டுமென ஏற்பாடுசெய்யலாம்.

*பரிசோதனை செய்வதற்கான தத்துவங்கள்.*

7. (1) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி அல்லது பரிசோதகர் தரத்துக்குக் குறையாத மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர் எவரும் அல்லது கண்காணிப்பாளர் தரத்துக்குக் குறையாத சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர் எவரும் அல்லது உதவிப் பொலிஸ் பரிசோதகர் தரத்துக்குக் குறையாத பொலிஸ் அலுவலர் எவரும். -

இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுபுரியப்பட்டிருக்கிறதா அல்லது புரியப்பட்டுக்கொண்டு இருக்கிறதா என்பதை உறுதிசெய்வதற்காக அல்லது அத்தகைய வாகனத்தில், கலத்தில், தொழிற்சாலையில் அல்லது வளவுகளில் உள்ள அத்தகைய புகையிலையின், சிகரட்டுகளின், சுருட்டுகளின், பீடிகளின், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்களின் அல்லது சுங்கான் புகையிலையின் அளவை உறுதிசெய்யும் நோக்கத்துக்காக அல்லது புகையிலைவரி, மதுவரி (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வை, சுங்கத்தீர்வை அல்லது வெறு ஏதெனும் வாசெலுத்தப்பட்டுள்ளதா அல்லது அவற்றின்மீது செலுத்தப் படற்பாலாதாக இருக்கின்றதா என்பதை உறுதி செய்வதற்காக அல்லது இச்சட்டத்தின்கீழ் மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டின் அல்லது வெளிப்படுத்துகையின் செம்மையாந்தன்மையைச் சரிபார்ப்பதற்காக அல்லது விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியன தொடர்பான எவையேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களைப் பரிசோதனை செய்வதற்காக –

(அ) எந்த வாகனத்தில் அல்லது கலத்தில், புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள் சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை எடுத்துச் செல்லப்படுகிறதோ அல்லது எடுத்துச் செல்லப்படுகிறதெனச் சந்தேகிக்கப்படு கிறதோ. அந்த வாகனத்தை அல்லது கலத்தை நிறுத்தி அதனுள் பிரவேசிக்கலாம்;

(ஆ) எந்தத் தொழிற்சாலையில் அல்லது வளவுகளில் புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை வைத்திருக்கப்படுகின்றனவோ அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அல்லது வைத்திருக்கப்படுகின்றன அல்லது களஞ்சியப்படுத் தப்பட்டிருக்கின்றன எனச் சந்தேகிக்கப்படுகின்றதோ, அத்தொழிற்சாலைக்குள் அல்லது வளவுகளுக்குள் ஏதேனும் நியாயமான நேரத்தில், நுழைந்து பரிசோதனை செய்யலாம்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர் ஒருவரை அவ்வுட்பிரிவில் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் புரிவதினின்றும் தடுக்கின்ற அல்லது முட்டுக்கட்டை போடுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ்தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*இறக்குமதி செய்யப்பட்ட புகையிலையும் புகையிலை உற்பத்திப் பொருட்களும்.*

8. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உற்பத்தியாளர் ஒருவராகப் பதிவுசெய்துகொண்ட ஒருவர், விடயத்துக்கேற்றவாறு, இலங்கைக்குள் அந்த அளவு கொண்ட புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றை இறக்குமதி செய்வது தொடர்பிலான இறக்குபொருட்பட்டியலின் இணைப்பிரதியொன்றைத் தம் உடைமையில் வைத்திருந்தாலொழிய, தமது தொழிற்சாலையில் எந்த அளவினதானதுமான இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றை வைத்திருத்தலாகாது.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உற்பத்தியாளர் ஒருவராகப் பதிவு செய்துகொண்ட ஆள் ஒவ்வொருவரும், பரிசோதகர் தரத்துக்குக் குறையாத தரம் கொண்ட மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த எவரேனும் அலுவலரினால் அல்லது பொலிஸ் பரிசோதகர் தரத்துக்குக் குறையாத தரம் கொண்ட எவரேனும் பொலிஸ் அலுவலரினால் அவ்வாறு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து, விடயத்துக்கு ஏற்றவாறு, அவரது தொழிற்சாலையில் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அளவினதான இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை தொடர்பிலான இறக்குபொருட்பட்டியலின் இணைப்பிரதியொன்றைப் பரிசோதனைக்காக முன்வைத்தல் வேண்டும்.

*எடைகள் மற்றும் எடை பார்க்கும் சாதனங்கள் தொழிற்சாலைகளில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.*

9. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உற்பத்தியாளர் ஒருவராகப் பதிவுசெய்துகொண்டிருக்கும் ஆள் ஒவ்வொருவரும், எடைகள் மற்றும் அளவுகள் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற ஏதேனும் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்கக்கூடியவாறானதும் அத்துடன் அத்தகைய சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு முத்திரை பதிக்கப்பட்டதுமான அத்தகைய எடைகளையும் எடைபார்க்கும்

சாதனங்களையும் புகையிலை அளவுகளை எடைபார்ப்பதற்கா கத்தமது தொழிற்சாலையில் வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன், அவர், மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த பரிசோதகர் தரத்துக்குக் குறையாத தரத்தைச் சேர்ந்த அலுவலர் எவரினாலும் அல்லது உப பொலிஸ் பரிசோதகர் தரத்துக்குக் குறையாத அலுவலர் எவரினாலும் அவ்வாறு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்படும்போது, அத்தகைய தொழிற்சாலையில் உள்ள எந்த அளவினதானதுமான புகையிலையை எடைபார்த்தல் வேண்டும் அல்லது எடைபார்ப்பித்தல் வேண்டும்.

**10.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ், மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி தவிர்ந்த, மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் அலுவலரினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிவினால் இன்னலுற்ற ஆளெவரும், அவருக்கு அத்தகைய முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள், மதுவரி ஆணையாளர் தலைமை யதிபதிக்கு, அதற்கொதிராக மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீடுகள்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் மதுவரி ஆணையாளரினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிவினால் இன்னலுற்ற ஆளெவரும் அவருக்கு அத்தகைய முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள், அதற்கெதிராக, நிதி என்னும் விடயத்துக்குப்பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ்ச் செய்யப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்றும் எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைக் கூறுதலும் வேண்டும்.

(4) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன் முறையீடுபற்றித் தீர்மானிப்பதற்கு முன்னர், மேன்முறையீட்டாளர் தம்பக்க உரையைத் தாமாகவோ அல்லது அவரது அதிகாரமளிக் கப்பட்ட பிரதிநிதி மூலமாகவோ எடுத்துரைப்பதற்குச் சந்தர்ப் பமொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், விடயத்துக்கேற்றவாறு, (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்பட்டதன் மேல், அத்தகைய மேன்முறையீடு எம்முடிவுக்கெதிராகச் செய்யப்பட்டதோ, அம்முடிவை உறுதிப் படுத்தலாம், மாறுபடுத்தலாம் அல்லது நீக்கலாம்.

*பிழையான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுக்களைக் கையாளுதல் தவறொன்றாதல் வேண்டும்.*

**11**. இறக்குமதி செய்யப்பட்டதன் மேல் சுங்கத் தீர்வை அல்லது உற்பத்தித் தீர்வை விதிக்கப்படற்பாலனவாக இருக்கின்றனவும் –

(அ) சுங்கக் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித்தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தீர்வை செலுத்தப்படாமல், இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட அல்லது வேறு இடத்தில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட அல்லது இலங்கையில் ஏதேனும் ஆகாயவிமானத் திலிருந்து இறக்கப்பட்ட சிகரட்டுகள் எவற்றையும் ;

(ஆ) வேறு விவரணத்தைக் கொண்டிருக்கும் கொள்கலன் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டு இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட சிகரட்டுகள் எவற்றையும் ;

(இ) இலங்கையில் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னரோ அல்லது ஒப்படைக்கப்பட்ட பின்னரோ, அது தொடர்பில் செய்யப்பட்ட இறக்கு பொருட்பட்டியலோடு நேரொத்ததாக இல்லாமல் இருப்பதாகக் காணப்பட்ட சிகரட்டுகள் எவற்றையும் ; அல்லது

(ஈ) சுங்கத் திணைக்களத்தின் அல்லது மதுவரித் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரை ஏமாற்றுவதற்கு முன்னப்பட்டதெனத் தோன்றுகின்ற ஏதேனும் முறையிலும் மறைக்கப்பட்ட அல்லது பொதி செய்யப்பட்ட சிகரட்டுகள் என்பவற்றையும்.

களஞ்சியப்படுத்துகின்ற, ஓரிடத்திலிருந்து இன்னோரிடத் துக்குக் கொண்டு செல்லுகின்ற, வழங்குகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற, விற்பனை செய்கின்ற அல்லது வேறுவகையில் கையாளுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**12.** புகையிலை வரி அல்லது சுங்கத்தீர்வை அல்லது உற்பத்தித்தீர்வை செலுத்தப்பட்டிராத எவையேனும் சிகரட்டுகளை, சுருட்டுகளை, பீடிகளை, சிகரட்டுப்பதிலீட்டுப் பொருட்களை அல்லது சுங்கான் புகையிலையை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குக் கொண்டு செல்கின்ற, வழங்குகின்ற, விற்பனை செய்கின்ற அல்லது களஞ்சியப்படுத்துகின்ற அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டி வைக்கின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை உற்பத்திப் பொருட்களைக் கையாளுதல் தவறொன்றாதல் வேண்டும்.*

**13.** சிகரட்டுகள், சுருட்டுகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியவற்றை உற்பத்தி செய்பவராக, அவற்றின் வியாபாரியாக அல்லது அவற்றை இறக்குமதி செய்பவராக அல்லது கையாளுபவர் ஒருவராக இருக்கின்ற ஆளொருவராக இருந்து கொண்டு, 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவருக்கு விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அப்பணிப்புரையை அசட்டை செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாட்டோடு இணங்கியொழுகாமை தவறொன்றாதல் வேண்டும்.*

**14.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளையோ அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளையோ மீறுகின்ற அல்லது அவ்வேற்பாடுகளுடனோ அல்லது ஒழுங்குவிதிகளுடனோ இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*நானாவிதத் தவறுகள்.*

**15.** (1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகின்ற ஆள் ஒவ்வொருவரும், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாத ஒருகாலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*தண்டம்.*

(2) ஏதேனும் புகையிலை, சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை தொடர்பில் புரியப்பட்ட தவறு எதற்காகவும் இச்சட்டத்தின்கீழ் ஆளெவருக்கும் குற்றத் தீர்ப்பளிக்கும் நீதிமன்றம், அது சுமத்தக்கூடிய வேறு ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து, அத்தகைய புகையிலையை, சிகரட்டுகளை, சுருட்டுகளையும்.

பீடிகளையும் சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்களையும் அல்லது சுங்கான் புகையிலையையும் அத்துடன் அத்தவறு புரியப்படுவதில் அல்லது புரியப்பட்டது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனத்தையும் அல்லது பொருளையும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுக்கு உடைமையாக்கப்படுதல் வேண்டும் என வெளிப்படுத்துகின்ற கட்டளையையும் ஆக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கட்டளை யொன்று-

(அ) அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்கு, பறிமுதல் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப் பட்டிருக்கின்றவிடத்து, பறிமுதல் கட்டளையை உறுதி செய்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற அத்தகைய மேன்முறையீட்டின் இறுதித் தீர்மானத்தின் மேல், பயனுறுதல் வேண்டும் ;

(ஆ) அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்துக்குள் அரசிய லமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்குப் பறிமுதல் கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப் பட்டிருக்காதவிடத்து, அக்காலப் பகுதி முடிவுற்றதன் பின்னர் பயனுறுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உற்பத்தியாளரொருவராகப் பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்து, நீதிமன்றம், இதற்கு முன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வேறு தண்டனையுடன் சேர்த்து, உற்பத்தியாளர் ஒருவராக அவர் இருக்கின்ற பதிவை இல்லாதாக்குகின்ற கட்டளையை ஆக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் ஆள், மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால், அவ்வாறு செய்வது தகுந்தது எனத் தமது தற்றுணிபின் பேரில் அவர் கருதினால், உற்பத்தியாளர் ஒருவராக மீண்டும் பதிவு செய்யப்படலாம்.

(5) இச்சட்டத்தின்கீழ் தவறொன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, தவறுபுரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், பொதுமுகாமையாளர், செயலாளர் அல்லது அதேபோன்ற வேறு அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தவறானது அவரது அறிவுக்கு எட்டாமல் புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) மதுவரி ஆணையாளர் தரத்துக்குக் குறையாத மதுவரித் திணைக்களத்தின் அலுவலர் எவரும், அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும், மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினதும் எழுத்திலான அங்கீகாரங்களுடன், அத்தகைய தவறுக்காகச் சுமத்தப்படற்பாலதான ஆகக்கூடிய குற்றப்பணத்தின் ஐந்தில் ஒன்றுக்குக் குறையாத தொகைக்குச் சமனான பணத்தொகையொன்றுக்கு, இச்சட்டத்தின்கீழான தவறெதையும் இணக்கலாம்.

(7) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியானவர், அரசினால் பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் புகையிலையை, எவையேனும் சிகரட்டுகளை, சுருட்டுகளை, பீடிகளை, சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்களை அல்லது சுங்கான் புகையிலையை (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் உடைமையில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்; அத்துடன் அவர் அவற்றை பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வித்து, விற்பனைகளில் இருந்து கிடைக்கும் வரும்படிகளை, 17 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு கையுதிர்த்தல் வேண்டும்.

**16**. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சுங்கத்தீர்வை அல்லது மதுவரித் தீர்வை எதுவும் செலுத்தப்பட்டிராத ஏதேனும் புகையிலை, எவையேனும் சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது ஏதேனும் சுங்கான் புகையிலை, அதற்கு முரணாக எண்பிக்கப்படும்வரை, இலங்கைப் புகையிலை அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை எனக் கொள்ளப்படுதல் வேண்டும். சான்று.

(2) இச்சட்டத்தின் கீழ்த் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கில் ஏதேனும் பொருள் அல்லது பண்டம் புகையிலையா, சிகரட்டா, சுருட்டா, பீடியா, சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்களா, சுஙகான் புகையிலையா என்ற வினாவொன்று எழுகின்றவிடத்து, சான்றிதழில் விபரிக்கப்பட்ட பொருள் அல்லது பண்டம், விடயத்துக்கேற்றவாறு புகையிலை, சிகரட்டு, சுருட்டு, பீடி, சிகரட்டுப் பதிலீட்டுப்பொருள் அல்லது சுங்கான் புகையிலை என்ற பயன்பட, அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அல்லது கமத்தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு புகையிலை அலுவலரின் அல்லது போதிய அனுபவம் கொண்ட மதுவரி அலுவலர் ஒருவரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று, சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன், அதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளின் உள்ளமைக்கு முதற்றோற்றளவிலான எண்பிப்பாதலும் வேண்டும்.

*சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட பறிமுதல்களும் தண்டங்களும் கொடுத்துத் தீர்க்கப்படுதல்.*

**17**. (அ) பதினைந்தாம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகள்; அத்துடன்

(ஆ) 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையில் இருந்து பெறப்பட்ட வரும்படிகள்,

ஆகிய தொகையானது, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அது (உறப்பட்ட எவையேனும் செலவுகளைக் கழித்ததன்பின்னர்) பின்வருமாறு பிரியோகிக்கப்படுதலும் வேண்டும் :-

(i) நாலில் மூன்று பங்கு, திறைசேரியின் பிரதிச் செயலாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அவரினால் திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ii) மீதி நாலிலொரு பங்கானது, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய செயற்றிட்ட மொன்றின்கீழ், மதுவரி அலுவலர்கள், சுங்க அலுவலர்கள், பொலிஸ் அலுவலர் கள், தகவல் கொடுப்போர்கள் மற்றும் இச்சட்டத்தை வலுவுக்கு இடுதலில் உதவி

புரிகின்ற ஏனையோர்கள் ஆகியோருக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இச்சட்டத்தினால் தாபிக்கப்பட வேண்டிய வெகுமதி அளிப்பு நிதியமொன்றுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

சிறப்புச் சேவைகளுக்காகவும் வருகை தருதல்களுக்காகவும் மதுவரி அலுவலர்களுக்குக் கொடுப்பனவு வழங்குதல்.

**18**. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் எவரும் அல்லது வேறு எவரும்-

(அ) விசேட சேவையொன்றென அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்ட சேவையெதையும் ; அல்லது

(ஆ) அவரது சரியான வேலைத்தலம் தவிர்ந்த ஏதேனும் தொழிற்சாலையில் அல்லது பண்டகசாலையில் அல்லது வளவில் எவரேனும் மதுவரி அலுவலரின் வருகையை

தேவைப்படுகின்றவிடத்து, விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய சேவைக்காக அல்லது வருகைக்காக, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது ஆளினால், மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில், கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் உற்பத்திவரிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் தத்துவங்களைக் கையளித்தல்.

**19**. மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது உற்பத்திவரிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் திறமையான நிருவாகத்துக்கு அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் அபிப்பிராயப்பட்டால், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மேல் சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை எழுத்துமூலம் கையளிக்கலாம்.

*வழக்குக்கு எதிரான பாதுகாப்பு.*

**20**. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றையும் அல்லது அவற்றின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாகக் கொள்ளப்பட்டு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக, குடியியல் நீதிமன்றம் எதிலும் சேத ஈடுகளுக்காக மதுவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது உற்பத்திவரிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது எவரேனும் மதுவரி அலுவலருக்கு எதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் இருத்தலாகாது.

*ஒழுங்குவிதிகள்.*

**21**. (1) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அத்துடன் அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகவும் அத்துடன், இச்சட்டத்தினால் சுமத்தப்பட்ட புகையிலை வரி தவிர்க்கப்படுவதைத் தடைசெய்வதற்கும்; அத்துடன் விதித்துரைக்கப்பட்ட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், எத்தொழிற்சாலையில் ஏதேனும் புகையிலை பயன்படுத்தப்படுகிறதோ அத்தொழிற்சாலையில் அப்புகையிலை மீது செலுத்தப்படற்பாலதான புகையிலைவரி அத்தகைய புகையிலையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப்பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியன களஞ்சியப்படுத்தப்படுவதற்காகத் தனிவேறான பண்டகசாலை அல்லது அறை ஒன்றைப் பேணுவதற்கும், அவற்றின்மீது செலத்தப்படற்பாலதான புகையிலை வரி செலுத்தப்படுவதற்கு முன் அத்தகைய பண்டகசாலையிலிருந்து அல்லது அறையிலிருந்து அத்தகைய சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை அகற்றிச் செல்லப்படுவதை மேற்பார்வை செய்வதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கும் அத்துடன், எந்நியதி, நிபந்தனைகளுக்கு அமைய ஏற்றுமதிக்கென முன்னபப்பட்ட சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்க்ள மற்றும் சுங்கான் புகையிலை ஆகியவற்றின்மீது செலுத்தப்படற்பாலதான புகையிலை வரியிலிருந்து விலக்களிப்பு 4 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படலாமோ, அந் நியதி நிபந்தனைகளுக்கும் ஏற்பாடு செய்யலாம்.

*(3)* இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*(4)* ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர், வசதியாகக் கூடியளவு விரைவாக, அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்துக்கு முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதி எதுவும் எத்தேதியன்று அவ்வாறு இல்லா தொழிக்கப்பட்டுவிட்டது எனக் கருதப்படுகின்றதோ, அத்தேதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**22**. *(1) (245 ஆம் அத்தியாயமான) 1953 ஆம் ஆண்டின் 27 ஆம்* இலக்க, புகையிலை வரிச்சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. *நீக்குதலும் பேணல்களும்.*

*(2)* ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை வரிச்சட்டம் நீக்கப்பட்டது. எப்படியிருப்பினும்–

(அ) அச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று வலுவில் இருக்கின்றவையுமான ஒழுங்குவிதிகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாதிருக்கின்றவிடத்தும் அத்துடன் ஒவ்வாதனவாக இல்லாதிருக்கின்ற அளவும் தவிரவும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அவை மாற்றப்படும் வரை, திருத்தப்படும் வரை அல்லது இல்லாதொழிக்கப்படும் வரை தொடர்ந்து வலுவில் இருத்தலும் வேண்டும்;

(ஆ) அச்சட்டத்தின் நோக்கத்துக்காக உற்பத்தியாளர்களாகப் பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் எல்லோரும், இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***23***. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் திமிழ் உரைக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

***24***. இச்சட்டத்தில் -

"பீடி" என்பது, அது வெட்டப்பட்டிருந்தாலென்ன, நசுக்கப்பட்டிருந்தாலென்ன, நொருக்கப்பட்டிருந்தாலென்ன அல்லது தூளாக்கப்பட்டிருந்தாலென்ன -

(i) "எபனனியே " என்னும் குடும்பத்தைச் சேர்ந்ததும் "டையோஸ்பைறோஸ் மெலனொக்ஸி லோன்" அல்லது "டையாஸ்பைறோஸ் எபினம்" என அறியப்படுவதுமான தாவரவியல் பெயரைக் கொண்ட உஷ்ணவலய மரத்தின் இலையொன்றில் அல்லது அதன் பதிலீட்டுப் பொருட்களில் வைத்துச் சுற்றப்பட்டதும் ஆன; அத்துடன்

(ii) புகைப்பதற்கென முன்னப்பட்டதும் ஆன பீடி உற்பத்திக்கென விசேடமாகப் பயிர்செய்யப்பட்ட புகையிலை எனப் பொருள்படும் ;

"சுருட்டு" என்பது, வெட்டப்பட்டிருந்தாலென்ன, நசுக்கப்பட்டிருந்தாலென்ன, நொருக்கப்பட்டிருந்தாலென்ன அல்லது தூளாக்கப்பட்டிருந்தாலென்ன -

(i) புகையிலையொன்றில் வைத்துச் சுருட்டப்பட்டதுமான, அத்துடன்

(ii) புகைப்பதற்கென முன்னப்பட்டதுமான, புகையிலை எனப் பொருள்படும் ;

"சிகரட்டு" என்பது, வெட்டப்பட்டிருந்தாலென்ன, நசுக்கப்பட்டிருந்தாலென்ன, நொருக்கப்பட்டிருந்தாலென்ன அல்லது தூளாக்கப்பட்டிருந்தாலென்ன -

(i) (பீடி உற்பத்திக்காகக் கருதப்பட்ட புகையிலை அல்லது இலை தவிர்ந்த) வேறு ஏதேனும் வகையைச் சேர்ந்த காப்பிலையில் வைத்துச் சுருட்டப்பட்டதுமான; அத்துடன்

(ii) புகைப்பதற்கென முன்னப்பட்டதுமான,

சிகரட்டு உற்பத்திக்கென விசேடமாகப் பயிர் செய்யப்பட்ட புகையிலை எனப் பொருள்படும் ;

"சிகரட்டுப் பதிலீட்டுப் பொருள்" என்பது, எவ்வகையான காப்பிலையில் எவ்வுருவத்திலும் வைத்துச் சுருட்டப் பட்டதும் புகைபிடித்தலுக்கென முன்னப்பட்டதுமான எவ்வகையானதுமான புகையிலையெனப் பொருள்படும், அத்துடன் பீடியொன்றை, சுருட்டொன்றை அல்லது சிகரட்டு ஒன்றை உள்ளடக்காது ;

" மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, மதுவரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருள்படும் ;

"சுங்கத்தீர்வை" என்பது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டு அத்துடன் இறுக்கப்பட்ட சுங்கத்தீர்வை எனப் பொருள்படும் ;

"சுங்கப் பணிப்பாளர்தலைமையதிபதி" என்பது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"உற்பத்தித்தீர்வைப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வைப் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"உற்பத்தித்தீர்வை" என்பது, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டு அத்துடன் இறுப்பனவு செய்யப்பட்ட உற்பத்தித் தீர்வை எனப் பொருள்படும் ;

"தொழிற்சாலை" என்பது, -

(அ) எவ்வளவுகளில் சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், கிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியன உற்பத்தி செய்யப் படுகின்றனவோ அவ்வளவுகள் எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எவையேனும் வளவுகள் தொடர்பில் பேணப்படும் ஏதேனும் களஞ்சியசாலையையும் அல்லது வேறு இடத்தையும் உள்ளடக்கும் ;

“இறக்குமதி” என்பது, இலங்கை எல்லைகளுக்கு வெளியே இருக்கின்ற அல்லது அப்பால் இருக்கின்ற ஏதேனும் இடத்திலிருந்து கடல்மார்க்கமாகவோ அல்லது ஆகாய மார்க்கமாகவோ இலங்கைக்குள் கொண்டு வருதல் எனப் பொருள்படும் ;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்டவரும் நிதி என்னும் விடயம் ஒதுக்கப்பட்டிருப்பவருமான அமைச்சர் எனப் பொருள்படும் ;

“சுங்கான் புகையிலை” என்பது, வெட்டப்பட்ட புகையிலை அல்லது சுங்கான்களில் போட்டு உபயோகிக்கப்படக் கூடிய விதத்தில் தட்டையான துண்டுகளாக அழுத் தப்பட்ட அல்லது சுங்கான்களில் போட்டுப் புகைப்பதற்கென முன்னப்பட்ட புகையிலை எனப் பொருள்படும் ;

“விற்பனை அல்லது கொள்வனவு” என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும் ;

“விற்பனை அல்லது கொள்வனவு” என்பது, எவையேனும் சிகரட்டுகள், சுருட்டுகள், பீடிகள், சிகரட்டுப் பதிலீட்டுப் பொருட்கள் அல்லது சுங்கான் புகையிலை ஆகியன தொடர்பிலான அவற்றின் இலக்கணம் சார்ந்த மாறுபாடுகளுடனும் அவற்றோடு தொடர்புபட்ட சொல்லமைப்புகளுடனும் சேர்த்து, சாதாரணமாகத் தொழிலை அல்லது வியாபாரத்தைச் செய்யும் போது காசுக்காக அல்லது பின்போடப்பட்ட கொடுப்பனவுககாக அல்லது வேறு பெறுமதி வாய்ந்த பிரதிபயனுக்காக அவற்றின் உடைமையை ஓர் ஆள் இன்னோர் ஆளுக்குக் கைமாற்றுதல் எனப் பொருள்படும் ;

"இலங்கைப் புகையிலை" என்பது, இலங்கையில் பயிர் செய்யப்பட்ட புகையிலைத் தாவரத்தின் இலை எனப் பொருள்படும் என்பதுடன், இலங்கையில் காணப்பட்ட எப்புகையிலையின் மூலமானது வேறு வகையில் தாபிக்கப்படவில்லையோ, அப்புகையிலையையும் உள்ளடக்கும் ;

"கொண்டு செல்லுதல்" என்பது, இலங்கைக்குள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் கொண்டு செல்லுதல் எனப் பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*